1992 செப்டம்பர் 24]

திரு. சூ. சே. இராஜமன்னார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தாழ்மையான வேண்டுகோள். இன்று நெல் அரவை மில் வைத்து இருக்கிற ஆதிதிராவிட தொழில் அதிபர்களுக்கு 'ஹல்லிங் ஏஜென்சி' கொடுப்பதில் செக்யூரிட்டி டெப்பாசிட்டாக 50 சதவீதம் பணம் கட்டினால் போதும் என்று உத்தரவு பிறப்பித்து இருக்கும், ஆதிதிராவிட மக்களின் இரட்சகராக பெயர் பெற்று இருக்கும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்விக்கு வாருங்கள்.

திரு. சூ. சே. இராஜமன்னார்: தலைவர் அவர்களே, சீவலப்பேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்று வரும் அந்தத் திட்டத்தை தூத்துக்குடி விமான நிலையம் ஆரம்பிக்கும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்வியாகப் போடவும். (குறுக்கீடு) சீவலப்பேரிக்கு இதில் எப்படி பதில் வரும்? உட்காருங்கள். தனிக் கேள்வியாகப் போடவும்.

வினா எண் 74, திரு. ம. சின்னசாமி மற்றும் திரு. என். ஆர். சிவபதி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

74—

நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தின் இன்றியமையாமையை மக்களுக்கு உணர்த்துதல்

*9719— திரு. ம. சின்னசாமி:

திரு. என். ஆர். சிவபதி:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தின் இன்றியமையாமையை மக்கள் இன்னும் முழுமையாக உணரவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதன் இன்றியமையாமையை குறித்து மக்கள் அறிந்துகொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1992 செப்டம்பர் 24

(அ) மற்றும் (ஆ) : நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தின் இன்றியமையாமையை மக்கள் முழுமையாக உணரவில்லை என்ற காரணத்தால் அரசு இப்போது பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்புகள் மற்றும் மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையத்தின் சிறப்புத் தன்மை வாய்ந்த தீர்ப்புகளை பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். அதேபோல மத்திய அரசு வெளியிட்டிருக்கின்ற 'தி குருசேட்' என்ற படத்தினுடைய பிரதிகளை வாங்கி அனைத்து மாவட்டங்களில் உள்ள திரையரங்குகளில் திரையிட ஏற்பாடு செய்திருக்கிறோம். 'ஸ்பிக்' நிறுவனமும், இந்தியன் வங்கியும் சேர்ந்து தங்களுடைய நிதி உதவியால் காசட்டுகள் தயாரிக்கப்பட்டு இருக்கின்றன. அதனை தொலைக்காட்சியில் காண்பிக்கவும், போதுமான விளம்பரங்கள் செய்வதற்கான நடவடிக்கைகளையும் இதுபோன்ற பல நடவடிக்கைகளை அரசு எடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தினுடைய முழுமையை இன்னும் மக்கள் உணரவில்லை. குறிப்பாக நகர்ப்புறங்களில் இருக்கின்ற மக்கள் அதுவும் சிலபேர் மட்டும்தான் இதைப்பற்றி அறிந்து இருக்கிறார்கள். கிராமப்புறங்களில் இதனுடைய முக்கியத்துவத்தைப் பற்றி யாருக்குமே தெரியவில்லை. அதற்கான பல்வேறு நடவடிக்கைகளை எல்லாம் எடுத்து இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் தீவிரமாக எடுப்பதற்கு ஒரு பிரச்சாரக் குழுவை அரசின் சார்பில் அமைத்து இந்த நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தினுடைய முக்கியத்துவம் பற்றி எல்லா கிராமங்களுக்கும் சென்று அவர்கள் மக்களுக்குச் சொல்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். நமது மாநிலத்திலுள்ள 13 ஆயிரம் முதியோர் கல்வி மையங்களில் பயன்படும் வகையில் நுகர்வோர் பாதுகாப்பு குறித்து ஒரு பாடம் துணை நூலாக சேர்க்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் தமிழகத்தில் இருக்கின்ற கல்லூரிகளில் உள்ள வேதியியல் பாடத்தில் உணவு கலப்படம் மற்றும் அவற்றின் கண்டுப்பிடிப்பைப் பற்றிய ஒரு பாடத்தை அதிலே சேர்க்கச் சொல்லியிருக்கிறோம். அதுபோக பல்வேறு பல்கலைக் கழகங்களில் எம். பில்., பி.எச்.டி. போன்ற தலைப்புகளில் நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் பற்றிய ஒரு தலைப்பைச் சேர்க்கச் சொல்லியிருக்கிறோம். மாநில அளவில் பல கருத்தரங்குகள் நடைபெறுகின்றன. இதுபற்றியும் இன்றைக்கு மாநில அளவிலான கருத்தரங்கை சிறப்பான முறையில் நடத்தி வருகிறோம். இது போதுமானது என்றே நான் கருதுகிறேன்.

1992 செப்டம்பர் 24]

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தின் சட்ட திட்டங்களை மத்திய அரசை எதிர்நோக்காமல் மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் மாநில அரசே இயற்ற முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்சுமர் புரடெக்ஷன் ஆக்ட்' என்பது மத்திய அரசின் சட்டம். அதை நிறைவேற்றுகின்ற பொறுப்பு மாநில அரசிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மத்திய அரசு, மாநில அரசு ஆகிய 2 பேரும் சேர்ந்து இந்த நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றி வருகிறோம். அந்த நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் நம்முடைய இந்திய நாட்டைப் பொறுத்த வரையில் ஒரு புதிய இயக்கம். ஆகவே எல்லோரும் சேர்ந்துதான் அந்த இயக்கத்தை வளர்த்தாக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 75, செல்வி எல். சுலோசனா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

75—

மேட்டுப்பாளையத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையம்.

*10038—செல்வி எல். சுலோசனா :

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையத்தில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-25.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலேயே மேட்டுப்பாளையம் தொகுதியிலேதான் அதிகமாக, சுமார் 70-க்கும் மேற்பட்ட சிறு கிராமங்களில் மலைவாழ் மக்கள் வாழ்கின்றனர். மேலும், நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த மக்கள் சுமார் 100 குடும்பத்தினர் 10 ஆண்டுகளுக்கும் மேலாக நிலையாக ஒரேயிடத்தில், காரமடை என்ற பகுதியில் வாழ்கின்றனர். மிகவும் பின்தங்கிய மக்களின் நலனைப் பேணிக் காக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி